**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 103/2020 PW 4.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெள்ளிபூசாரி | தந்தை/கணவர் பெயர்: பிச்சன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.01.2025

---

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)**

**<u>12.11.2025 முதல் விசாரணை</u>:**

1. நான் மின்னமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் எப்போது செய்தேன் என்று தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசாரி என்னை விசாரிக்கவில்லை. பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ.–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2.22.05.2020–23.05.2020 ம்தேதிக்கு இடப்பட்ட இரவில் 12.45 மணிக்கு உலகப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் குற்ற எண் 36/2020 வழக்கின் சம்பவ இடத்தை விளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து என்னிடமும் சாட்சி வீரன் என்பவரிடமும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் வாங்கினார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.**